www.tamilarangam.net

# சிறுவர் அமுதம்

19.12.99

எண்ணம் 10 கிண்ணம் 12




சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்புச் சிறுவர் சிறுமியரே!

"சிறுவர் அமுதம்" தன் பத்தாவது ஆண்டை இந்த வருடத்துடன் பூர்த்தி செய்து கொள்கிறது. இரண்டாயிரம் ஆண்டை எட்டியிருக்கும் இக் காலகட்டத்தில், பல முன்னேற்றமான நிலைகள் ஐரோப்பியத் தமிழரிடத்திலும் ஏற்பட்டு விட்டன. வானொலி, பத்திரிகைகள், கொம்பியூற்றர், நம் நாட்டுக் கடைகள், உணவகங்கள் இன்னும் என்னென்னவோ மாற்றங்கள். இங்கு கிடைக்காதது எம்நாட்டு மண்ணும்! காற்றுமே!. அகதிகளாகக் ஐரோப்பிய மண்ணில் கால் வைத்த வேளைகளில் இவற்றிற்காக ஏங்கினோம்.

கிடைத்தது பெரிதல்ல! கிடைப்பதைக் கொண்டு நம் எதிர்காலத்தை வளம் பெறச் செய்ய வேண்டும். வாழ்க்கை வாழ்வதற்குத் தான். எதிர்காலச் சந்ததியும் வளமாக வாழ வேண்டும். வரும் புத்தாண்டும், வரும் ஆண்டுகளும் பெருமைக்குரிய ஆண்டுகளாக மலரட்டும். இது ஆசிரியையின் விருப்பம். பத்தாண்டுகளாகத் தொடர்ந்து வந்த சிறுவர் அமுதம் தன் பணியை இத்துடன் நிறுத்திக் கொள்கிறது.

ஜேர்மன் செஞ்சிலுவைச் சங்கமும், "எவாங்ளிஸ்" அமைப்பும் வாசகராகிய நீங்களும் தந்த ஒத்துழைப்புடன், பத்தாண்டுக் காலத்தை எட்டிய எமது சஞ்சிகை, தன் சேவையைப் பூர்த்தி செய்து கொள்கிறது. பொதுச் சேவையில் தங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அர்ப்பணித்துக் கொண்ட இவ்விரு அமைப்புக்களின் உதவி இனியும் கிடைப்பது அரிதாக இருப்பதும், வேறு சில சிரமங்களாலும் தற்சமயம் சிறுவர் அமுதம் உங்களிடம் இருந்து விடை பெற்றுக் கொள்கிறது.

-ஆசிரியை-

## சொல்லுங்கள்...

வரும் சொற்களை கண்டு பிடியுங்கள். ஒவ்வொரு சொற்களுக்கும் முடிவில் "கை" வரும்.

திருவிழாவின் வேறு பெயர்

இதன் மேல் உறங்கலாம்.

கரிய பறவை

அமர்ந்து கொள்ள உதவுவது

கோமாளிகள் காட்டுவது

பெண்ணின் மறுபெயர்

சிரிப்பில் ஒரு வகை

மதுரையில் ஓடும் ஆறு

நெல் குற்ற உதவுவது

சகோதரியின் மறு பெயர்

மூலம்: கோகுலம்

www.tamilarangam.net

## உன்னை எனக்குத் தெரியாதா?

முருகன் விறகு வெட்டிப் பிழைப்பவன். அவன் எந்தக் கடவுளையும் நம்புவதில்லை. ஏன் யாரையுமே நம்புவதில்லை.



ஒருநாள் காட்டுக்குச் சென்று மிக உயரமான மரத்திலிருந்து கிளையை வெட்டிக் கொண்டிருந்தான். அப்போது கால் இடறி விழுந்தான். ஆனாலும் மரக்கிளை ஒன்றைப் பிடித்துக் கொண்டான். கீழே ஆறு ஓடிக்கொண்டிருந்தது.

கை விட்டால் தான் ஆற்றில் மூழ்கி இறந்து விடுவேன் என்ற எண்ணம் வந்ததும் அவன் "கடவுளே என்னைக் காப்பாற்றும்" என்று வேண்டினான். அப்போது அவன் முன் கடவுளே தோன்றினார்.

அவர் அவனிடம் "நீ என்னை நம்ப மாட்டாய்!" என்றார். "இல்லை. நம்புகின்றேன். என்னை இப்பொழுது காப்பாற்று." என்றான். கடவுள் அவனிடம், "என்னை நம்புகிறாயானால் மரக்கிளையிலிருந்து கைகளை விடு." என்றார்.


www.tamilarangam.net

அதற்கு விறகு வெட்டி “கையை விட்டால் ஆற்றில் விழுந்து விடுவேனே?” என்றான்.

“பார்த்தாயா! இப்பொழுதே என்னை நீ நம்பவில்லை. மரக்கிளைப் பிடித்த நீ எப் படியும் தப்பி விடுவாய். முயற்சி செய்.” என்று சிரித்துக் கொண்டே கூறி மறைந்தார்.

## பணக்காரன்

சமூக சேவையாளரும், சிறந்த ஆசிரியருமான திரு. விநாயகம் அவர்கள் காலமாகி விட்ட செய்தி, அந்தக் கல்லூரியையே மிகவும் கதிகலங்கச் செய்தது. கல்லூரி மாணவர்கள் எல்லோருக்குமே பிடித்த ஆசிரியர் அவர். தன் குடும்பத்துக்காக அவர் எந்தச் சொத்துமே சேர்த்து வைக்கவில்லை. அதனால் அவரின் ஈமச் சடங்கைக் கூடச் செய்ய முடியாமல் மனைவி, பிள்ளைகள் கஷ்டப் பட்டார்கள்.



இதனை அறிந்த கல்லூரியின் ஆசிரிய, மாணவ சங்கங்கள் அதற்கான நிதியைத் திரட்டித் தாங்கள் அந்த உதவியைச் செய்ய எண்ணினார்கள். கல்லூரிலே நிதி

www.tamilarangam.net

சேகரித்தார்கள். பணம் போதாமல் இருக்வே, அந்தக் கிராமத்தின் பணக்காரரான ஏகாம்பரத்தை நாடினார்கள். ஏகாம்பரத்தாருக்கோ பணம் இருந்ததே தவிர படிப்பு இருக்கவில்லை.


கௌரவமான நிலையில் வாழ்ந்தபோதும், படிப்பு வாசனை இல்லாததால் படித்த அறிஞர்களைப் பற்றி யார் கதைத்தாலும் அவருக்குப் பிடிப்பதில்லை. படித்தவர்களைக் கண்டாலே முகத்தை “உம்”மென்று வைத்துக் கொள்ளுவார். அவரிடம் கேட்பதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லாத நிலையிலேயே அவரிடம் உதவியை நாடினார்கள்.

ஆனால் பணக்காரரோ வழக்கத்துக்கு மாறாக, “வாருங்கள்! வாருங்கள்! என்று அன்புடன் வரவேற்றார். அவர்கள் தாங்கள் வந்த காரணத்தைத் தயங்கித் தயங்கிச் சொன்னார்கள். பணக்காரர் “ஆசிரியரை அடக்கம் செய்ய உங்களுக்கு எவ்வளவு பணம் தேவைப்படுகிறது?” என்று கேட்டார். “2500 ரூபாய் தேவைப்படும்.” என்றார் ஒரு ஆசிரியர். பணக்காரர் எதுவும் பேசாமல் உள்ளே சென்றார்.

திரும்பி வரும்போது அவர் கைகளில் 100 00 ரூபாய் இருந்தது. அதை அவர்களின் கையில் ஒப்படைத்தார். அவர்கள் திகைத்துப் போய் நின்றார்கள். “எங்களுக்கு 550 ரூபாய் போதும் ஏன் கூடுதல் பணம் தருகிறீர்கள்?” என்றார்கள் வந்தவர்கள். அப்போது பணக்காரர், “அதற்கில்லை. இதைக் கொண்டு நான்கு ஆசிரியர்களை அடக்கம் பண்ணுங்கள்.” என்றார்.

www.tamilarangam.net

# கோயில் திருட்டு



அந்தக் கிராமத்திலுள்ள வீடுகளில் திருட்டுப் போய் விட்டால் அது தில்லையாகத் தானிருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனாலும் அவனைக் கையும் மெய்யுமாகப் பிடிக்க யாராலும் முடிவதில்லை. ஆனாலும் அன்று கிராமத்துச் சனங்கள் எல்லோருமே திகைத்து விட்டார்கள். கிராமத்தின் மத்தியில் இருந்த மாரியம்மன் கோயில் நகைகள் காணாமல் போயிருந்தன.

“இவ்வளவு காலமும் வீட்டுக் களவைத் தான் செய்து வந்தான். இப்பொழுதோ தெய்வத்திலேயே கை வைத்து விட்டானே!” கிராமத்துச் சனங்கள் தெய்வத்தின் மீது தீவிரமாகப் பக்தி கொண்டவர்கள். அவர்களால் அதை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. கோயில் தர்மகர்த்தாவிடம் சென்று முறையிட்டனர்.

www.tamilarangam.net

தர்மகர்த்தா கோயிலுக்கு விரைந்தார். சன்னதியில் நின்று கண்ணீர் விட்டழுதார். பின், "மாரியம்மா! உன் நகைகளை எடுத்தவனை சும்மா விடப் போவதில்லை." என்று சூழுரைத்தார். பின் அந்தக் கிராமம் முழுவதும் சல்லடை போட்டுத் தேடினார்கள். தில்லை கிடைக்கவில்லை. "திரும்பவும் அவன் கிராமத்துக்கு வரத் தானே வேண்டும். வரட்டும்." என்று சொல்லிக் கொண்டே தர்மகர்த்தா தன் வீட்டுக்குச் சென்று விட்டார்.

ஆனால் மாரியம்மனின் அதீத பக்தரான பரமகுருவுக்கும், கோயிலின் தொண்டுகுழுவின் தலைவரான பொன்வண்ணனுக்கும் மனம் அமைதிப் படவே இல்லை. இருவரும் பஸ்வண்டியிலேறி நகரத்துக்குச் சென்று பொலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர். பொலீசாரும் அதற்கான வழிகளில் தாங்கள் முயற்சிப்பதாகக் கூறினார்கள். நகைகளைத் திருடிய தில்லையோ மாறு வேடத்தில் புகைவண்டியில் அடுத்த நகரத்துக்குச் செல்லத் திட்டம் போட்டான்.

அவன் போய் இரண்டு வாரங்களாகி விட்டன. இது காற்று வாக்கில் கிராமத்தினருக்கு எட்டியது. திருடன் கை விட்டுப் போன கவலையில் கிராமத்தவர் மூழ்கியிருந்தனர். ஒரு நாட்காலையில் தர்மகர்த்தா வீட்டு வாசலில் பொலீஸ் வான் வந்து நின்றது. நகையைப் பற்றி அறியும் ஆவலில் கிராமத்தவர் வாசலில் நின்று வேடிக்கை பார்த்தனர். எதுவுமே தெரியவில்லை.

www.tamilarangam.net

திடீரென்று சனங்களை விலக்கியவாறே பொலீசார் தர்மகர்த்தாவை விலங்கிட்டு அழைத்து வருவதைக் கண்ட கிராமத்தவருக்கு உடனே எதுவுமே புரியவில்லை. சில நிமிட நேரத்தில் எல்லாமே புரிந்தது. ஆனாலும் தில்லை நகை திருடிய செய்தி எப்படி வந்தது? என்று யோசித்தார்கள். கிராமத்து வீடுகளில் சில்லறைத் திருட்டைத் தான் தில்லை செய்து வந்தான். தில்லை கோயில் நகைகளைத் திருடிய கையோடு அடுத்த நகரத்துக்குக் கிளம்பிய கதை தர்மகர்த்தாவால் கட்டி விடப்பட்ட கதை என்பதைக் கிராமத்து மக்கள் அறிய சில நாட்கள் பிடித்தது.

ஒரு ஆடம்பரத்தை மட்டும் என்னால் விட்டுவிட முடியாது. அதுதான் புத்தகங்கள் வாசிக்கும் பழக்கம்.

-ஜவகர்லால் நேரு-

அன்பு குறைந்த இடத்தில் குற்றங்கள் பெரிதாகத் தெரிகின்றன.

-ரூமேனியப் பழமொழி-

தீண்டாமையே இந்து மதமானால் அந்த மதமே அழிந்து விடட்டும்.

.மகாத்மா-

www.tamilarangam.net

# மழை



வானம் இன்று இருண்டதம்மா!
வான்மழையை நீ பொழிகின்றாய்!
கானம் யாரும் பாடாமல்,
காட்டில் மயிலும் ஆடுதம்மா!

மயிலுக்கு மட்டும் நீ
மகிழ்ச்சியைத் தருகின்றாய்!
சிறுமி பாடும் பாடலையே,
சிறிது நேரம் கேட்டுப் போ!

இருண்ட வானில் வெண்மதியும்
இன்புறும் ஒளியைத் தரவில்லை!
வரண்டு கிடந்த நிலத்திடையே
வளத்தை வைத்தாய் நீ மழையே!

வேண்டிக் கேட்கும் வேளையிலே,
விரைந்து நீயும் வருவதில்லை!
வேளை கெட்ட வேளையிலே,
வருவாய், உந்தன் எண்ணம் போல்!

www.tamilarangam.net

இந்த வேளை நீயும் தான்
இன்பமாகப் பொழிகின்றாய்!
இந்த வேளை பொழிவதினால்,
யாருக்கிங்கே நன்மை சொல்!

சொல்லாமல் நீ செல்லாதே!
சொல்லிப் போ நீ நல்மழையே!
பொல்லா மழையே ஏனோ நீ
போகின்றாயே, சொல்லாமல்!

அடுத்த முறை நீ வரும் போது,
அமுத மழையே சொல்லிப் போ!
விடுத்த வினாவை நீயும் தான்
விபரமாகக் கேட்டுப் போ!

-பாமினி அருள்வரதன்-

**எண்கள்**

தமிழிலுள்ள உயிரெழுத்துக்கள் பன்னிரெண்டு. ஆனால் ஒன்று முதல் நூறுவரை எழுதும்போது பல உயிரெழுத்துகள் தேவைப்படுவதில்லை. நீங்கள் ஆயிரம், கோடி என்று எழுதிக் கொள்ளுங்கள் "உ" அதாவது உகரம் தேவைப்படவே மாட்டாது.

பதின்மூன்றாம் இலக்கத்தை யாரும் பொதுவாக விரும்புவதில்லை. பதின்மூன்றாம் திகதி வெள்ளிக்கிழமை என்றால், பைபிள் கதைகளோடு தொடர்பு படுத்தி அந்தநாளில் எதுவுமே செய்ய மாட்டார்கள். அதிஷ்டமில்லாத எண்ணாகத் தான் அந்த இலக்கத்தைச் சொல்வார்கள்.

ஆனால் உலகத்தின் முதல் நாடாகக் கணிக்கப்படும் ஐக்கிய அமெரிக்காவின் கழுகுச் சின்னத்தின் அதன் கால்களின் விரல்கள் (இரு கால்களையும் சேர்த்து) பதின்மூன்று. அதன் இறக்கைகளின் இணைகளும் பதின்மூன்று தான். வாலிலும் பதின்மூன்று இறகுகளே. அச்சின்னத்தில் உள்ள வாசகங்களும் பதின்மூன்று தான்.

www.tamilarangam.net

# பெர்னாட் ஷாவின் கையொப்பம்



ஒருநாள் பெர்னாட்ஷா உணவு விடுதி ஒன்றுக்கு உணவருந்தச் சென்றார். அங்கு அவருக்கு உணவு பரிமாறிய சிற்பந்திக்கு அவர் ஷா என்பது தெரிந்தது. அச்சிற்பந்தி அவரிடம், "அவருடைய கையொப்பத்துடன் கூடிய புகைப்படமும் தாருங்கள்." என்று பணிவாகக் கேட்டார். ஷாவிடமோ புகைப்படமெதுவும் அந்த வேளையில் இருக்கவில்லை. வீட்டிற்குச் சென்று அனுப்புவதாகக் கூறி விட்டுக் கிளம்பி விட்டார்.

பின் அந்தச் சம்பவத்தையே பெர்னாட்ஷா மறந்து விட்டார். சில நாட்களின் பின் ஷாவுக்கு கடிதம் ஒன்று வந்தது. அக் கடிதத்தில் பின்வருமாறு எழுதியிருந்தது.

ஐயா, நீங்கள் எங்கள் உணவு விடுதிக்கு வந்திருந்த போது உங்களிடம் உங்கள் கையொப்பத்துடன் கூடிய புகைப்படம் கேட்டிருந்தேன். நான் மிகவும் பணக்கஷ்டத்தில் இருக்கிறேன். நான் வசதி படைத்தவனல்ல.

www.tamilarangam.net

உங்கள் கையொப்பமிட்ட புகைப்படம் நல்ல விலைக்கு விற்க முடியும் என்று சிலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். எனவே, என் கஷ்ட நிலை தீருவதற்காகவே உங்களிடம் அதை மீண்டும் நினைவு படுத்துகிறேன். நீங்கள் இந்த உதவியைச் செய்வீர்கள் என்றும் நம்புகிறேன்.

என்று எழுதியிருந்தார்.

இக் கடிதத்தைக் கண்டதும் ஷா உடனடியாகவே பதில் எழுதினார். அதில்,

நண்பரே,

உண்மையை வெளிப்படையாகத் தெரிவித்த உங்கள் நேர்மையைப் பாராட்டுகிறேன். நீங்கள் கேட்டபடி கையொப்பத்துடன் என் புகைப்படத்தையும் உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். அதிஷ்டம் உங்கள் பக்கம் இருக்கட்டும்.

என்று எழுதினார்.

கவலைகள் வந்து கொண்டு தான் இருக்கும். தவிர்க்க முடியாது. ஆனால் அதற்கு நாற்காலி போட்டு இருத்தி வைக்கக் கூடாது.

-பிரஞ்சுப் பழமொழி-

வேகமாய் எடுக்கப்படும் முடிவுகள் உறுதியானவை அல்ல!

-ஆர்தர்-

www.tamilarangam.net

# புத்திமதி



காகம் ஒன்று உண தேடியது. நல்ல கடும் பசி கடற்கரைக்கு வந்தது அங்கு நண்டுகள் ஏதாவது கிடைக்கும் என்ற எண்ணத்தில் அங்குப் இங்கும் அலைந்து தேடியது. எதுவுமே அதன் கண்களுக்குத் தென்படவில்லை. சிறிது நேரம் பாறை ஒன்றில் அமர்ந்து கொண்டது. சற்றுத் தூரத்தில் நத்தை ஒன்று தென்பட்டது.

அதைக் கௌவிக் கொண்டது. அதை எப்படிக் கொல்லுவது என்று அதற்குத் தெரியவில்லை அதைத் தூக்கிக் கொண்டு போய் ஒரு மரத்தில் உட்காந்து கொண்டு யோசித்தது. அப்போது ஒரு காகம் அந்த மரத்தில் வந்து அமர்ந்தது. அதனிடம் சென்ற காகம், "அண்ணா! இந்த நத்தையை எப்படி உடைப்பது என்று தெரியவில்லை. உதவி செய்யுங்கள்." என்றது.

அதற்கு மற்றக் காகம் "சொல்லித் தருகின்றேன் வா!" என்று சொல்லிக் கொண்டு வானத்தில் பறந்தது. நத்தையையும் கொண்டு சிறிய காகம் அதன் பின்னே பறந்தது. "அதோ! பார் இங்கிருந்தே அந்தப் பாறையின் மேல் போடு." என்றது.

www.tamilarangam.net

நத்தையைக் காகம் பாறையில் எறிந்தது. நத்தை ஓட்டை விட்டுப் பிரிந்தது. அப்போது பெரிய காகம் விரைந்து சென்று அதனைச் சாப்பிட்டது.

அதைக் கண்ட காகம், "நத்தை நான் என் பசிக்குத் தானே கொண்டு வந்தேன். உதவி செய்வதாகச் சொல்லி என் உணவை நீ பறித்து உண்டு விட்டாயே என்றது. அதற்குப் பெரிய காகம், " உடைப்பதற்குத் தானே வழி கேட்டாய்? உண்பதற்கல்ல. உண்டது எனது சாமர்த்தியம்." என்று கூறியது.

வீணாக வாக்கு வாதம் செய்ய வேண்டாம். இதனால் கேட்பவர்களின் புத்தி தடுமாறுமே தவிர ஒரு பயனும் இல்லை.

-ஜேசுநாதர்-

தனக்குத் தெரியாதவைகளைக் கேள்வி கேட்பவன் மற்றவர்களுக்கு முட்டாளாகத் தெரிவான். ஆனால் கேள்விகள் கேட்கத் தயங்குபவன் முட்டாளாகவே வாழ்கிறான்.

-ஆங்கிலப் பழமொழி-

பொய்யனுக்குத் தண்டனை ஒன்றுதான். அவன் மெய்யையே கூறினாலும் யாரும் நம்ப மாட்டார்கள்.

-ஜராதுஷ்டிரர்-

www.tamilarangam.net

# விஞ்ஞானியும் சிறுமியும்




நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானியான ஈன்ஸ்டினிடம், பக்கத்து வீட்டுச் சிறுமி வந்தாள். “எனக்குக் கணக்குச் சொல்லித் தரகிறீர்களா?” என்று ஈன்ஸ்டினிடம் கேட்டாள். ஈன்ஸ்டின் அவளிடம், “ சரி சொல்லித் தருகிறேன். எனக்கு எவ்வளவு சம்பளம் தருவாய்.” என்றார்.

அதற்குச் சிறுமி, “அப்பா, எனக்கு ஒவ்வொரு கிழமையும் ஒரு டொலர் தருவார். அதில் 75 சதம் உங்களுக்குத் தருகிறேன்.” என்றாள். ஈன்ஸ்டினும் வேடிக்கையாக ஒப்புக் கொண்டார். கணக்கு வகுப்பும் தொடர்ந்தது. இது ஒருநாள் சிறுமியின் தந்தைக்குத் தெரிய வந்தது. அவர் திகைத்தார். உலகறிந்த விஞ்ஞானி தன் மகளுக்குக் கணிதம் சொல்லித் தருவதா?

ஈன்ஸ்டினிடம் வந்து மன்னிப்புக் கோரினார் சிறுமியின் தந்தை. ஈன்ஸ்டின் சிரித்துக் கொண்டே கூறினார். “எனக்கு யாருமே இவ்வளவு குறைந்த சம்பளம் தந்ததில்லை. இதற்காக அவளை இங்கு வருவதை நிறுத்தி விடாதீர்கள். என் மாணவியாக அவள் தொடர்ந்து வர வேண்டும்.” என்றார்.

www.tamilarangam.net

# முட்டாள் அரசன்



ஒரு நாட்டின் அரசன் தன் மகனுக்கு மிகவும் செல்லம் கொடுத்து வளர்த்தான். இளவரசன் படிப்பதில் ஆர்வம் இருக்கவில்லை. அதனால் படிக்கவில்லை. தன்னிஷ்டத்துக்கே வளர்ந்தபடியால் முட்டாளாக இருந்தான். அரசன் இறந்ததும், இளவரசன் அரசனானான். ஏதோ நல்ல மந்திரிகளின் தயவால் நாட்டு மக்கள் பிரச்சனையில்லாமல் வாழ்ந்தனர்.

அரசனுக்குத் திருமணம் நடந்தது. அரசி மிகவும் நல்லவள் தான். ஆனாலும் மிகவும் சஞ்சல உள்ளம் கொண்டவளாக இருந்தாள். நல்ல சுகவாசியாக வாழ்ந்த அவளுக்கு வயிற்றுவலி ஏற்பட்டது. அரசிக்கு நோய் வந்தால் கேட்க வேண்டுமா? அரச வைத்தியர்கள் வைத்தியம் செய்தார்கள். வயிற்றுவலி நின்றபாடில்லை.

www.tamilarangam.net

வைத்தியம் செய்ய நாட்டின் தலை சிறந்த வைத்தியர்கள் வரவழைக்கப்பட்டார்கள். அவர்களும் தங்களுக்குத் தெரிந்த வைத்தியமுறைகளைக் கையாண்டார்கள். எதுவுமே பலன் கொடுக்கவில்லை. அரசியோ வைத்தியர்கள் தன்னைச் சரிவரக் கவனிக்கவில்லை என்று எண்ணிக் கொண்டாள்.

அதனால் அரசனிடம், "நான் இந்தநோயிலேயே இறந்து விட்டால், என் இறப்புக்குக் காரணம் வைத்தியர்கள் தான். அவர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்ற வேண்டும்." என்றாள். அரசனும் ஒப்புக் கொண்டான். அரசியும் நோய் குணமாகாமலே இறந்து விட்டாள். அரசன் வைத்தியர்கள் சரிவரக் கவனிக்காத படியால்தான் அரசி இறந்து விட்டாள் என்று எண்ணினான். மந்திரிகள் தடுத்தும் கேளாமல் சிறந்த வைத்தியர்களுக்கும் மரணதண்டனை அளித்தான்.

நல்ல சிரிப்பு என்பது சரியான மனோநிலையின் பிரதிபலிப்பு.


-மாக்கிம் கார்க்கி-

காதல் என்பது சூதாட்டம். தோற்பதற்கும் தயாராக இருப்பவர்களே அதை ஆடலாம்.

-வி.ஸ.காண்டேகர்-

www.tamilarangam.net

## மனிதர்கள்



மனிதர்கள் பலதரப்பட்டவர்கள் என்று சொல்லிக் கொள்கிறோம். மனிதர்களில் "ஏழுவகை" இருப்பதாக டாக்டர்.எட்வேட் பச் என்பவர் கூறியிருக்கின்றார்.

1. பயந்த சுபாவம் உள்ளவர்கள்.
2. சஞ்சலப் படுபவர்கள்
3. கற்பனையில் சஞ்சரிப்பவர்கள்.
4. தனிமை உணர்வு உள்ளவர்கள்
5. மற்றவர்களின் செல்வாக்குக்கோ, சொல்லுக்கோ கட்டுப்படாதவர்கள்.
6. எதிலும் பற்றில்லாதவர்கள்.
7. மற்றவர்களின் கவலைகளைத் தங்கள் கவலைகளாக எண்ணிக் கொண்டு அதற்கான வழிகளில் ஈடுபடபவர்கள்.

செய்யத் துணிபவனுக்கும், எண்ணத் துணிபவனுக்குமே வெற்றி கிடைக்கின்றது.
-பாரதிதாசன்-

சில நேரங்களில் புத்தி வெற்றி பெறுகின்றது. பல நேரங்களில் வெற்றியே புத்தியாகி விடுகின்றது.
-கண்ணதாசன்-

www.tamilarangam.net

முரசு



அன்பென்று கொட்டு முரசே- மக்கள்
அத்தனை பேரும் நிகராம்!
இன்பங்கள் யாவும் பெருகும்-இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்!

உடன் பிறந்தார்களைப் போல-இவ்
வுலகில் மனிதரெல்லோரும்!
இடம் பெரிதுண்டு வையத்தில்-இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்!

அறிவை வளர்த்திட வேண்டும்- மக்கள்

www.tamilarangam.net

அத்தனை பேருக்கும் ஒன்றாய்!
சிறியரை மேம்படச் செய்தால்-பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்!

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்- இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்!
பயிற்றுப் பல கல்வி தந்து-இந்தப்
பாரை உயர்த்திட வேணடும்!

ஒன்றென்று கொட்டு முரசே- அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே- இந்த
நானில மாந்தருக் கெல்லாம்!
-மகாகவி. சுப்பிரமணியபாரதி-

குதிரை மீது சவாரியை மனிதன் செய்யலாம். ஆனால் கடிவாளம் இறைவன் கையிலுள்ளது.
-அரேபியப் பழமொழி-

குழந்தைகள் இருட்டைப் பார்த்துப் பயப்படுவதை மன்னிக்கலாம். பெரியவர்கள் வெளிச்சத்தைப் பார்த்து மிரளுவதை எப்படி மன்னிக்க முடியும்.
-பிளேட்டோ-

www.tamilarangam.net

'பார்க்கலாம்!'



14ம் லூயி மன்னன் எதற்கெடுத்தாலும் "பார்க்கலாம்" என்று சொல்லி விடுவார். ஒரு நாள் பேரில் தன் கையை இழந்த போர்வீரன் அவரிடம் வந்தான். "மன்னா! போரில் எனது வலது கையை நான் இழந்து விட்டேன். என் குடும்பத்துக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும். உங்களிடம் எத்தனை தடவைகள் வந்து உதவி கேட்கிறேன். நீங்கள் எப்போதும் பார்க்கலாம் என்று சொல்லித் திருப்பி அனுப்பி விடுகிறீர்களே! என்றான்.

அரசன் அதற்கும், "பார்க்கலாம்" என்று சொன்னான். அப்போது அந்தப் போர்வீரன், "மன்னா! மன்னிக்க வேண்டும். போர்க்களத்தில் படைகளைக் கொண்டு மேலே முன்னேறு என்று சொல்லியபோது நானும் "பார்க்கலாம்" என்று சொல்லியிருந்தால் என் கையை நான் இழந்திருக்க மாட்டேன்." என்றான். மன்னன் சிரித்துக் கொண்டான். போர்வீரனுக்கான உதவிகள் உடனே செய்யப்பட்டன.

www.tamilarangam.net

## நாடோடிக்கதை



ஆற்றங்கரையின் அருகிலே ஒரு குடிசை. அந்தக் குடிசையில் ஒரு கிழவனும் கிழவியும் இரண்டு மகன்களும் வாழ்ந்து வந்தனர். ஆற்றில் வலை வீசி மீன் பிடித்து விற்பது அவர்கள் தொழில். கஷ்டப்பட்டுச் சீவியம் நடத்தி வந்தார்கள். ஒரு நாள் கிழவனால் எதுவுமே செய்ய முடியவில்லை. இரு மகன்களையும் ஆற்றில் மீன் பிடித்து வர அனுப்பினான். வெகு நேரமாக அவர்களுக்கு மீன் கிடைக்கவில்லை. பின் ஒரு மஞ்சள் மீன் அகப்பட்டது.

அந்த மீன் "தகதக" என்று மின்னியது. "அண்ணா! சிறிய மீன் தானே அகப்பட்டிருக்கிறது. அம்மா, அப்பா, நான், நீங்கள் எல்லோருக்கும் உணவாக்கக் கூட இது போதாதே?" என்றான் இளையவனான பைகோ. அதற்கு ரீகோ, "என்ன செய்வது? இன்று ஆண்டவன் இதைத் தான் தந்திருக்கிறான். இதையாவது தந்ததற்கு ஆண்டவனுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்."

www.tamilarangam.net

என்று சொல்லி அவனை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்தான்.

கிழவனும் கிழவியும் கவலைப் பட்ட மகன்களைச் சமாதானப் படுத்தினார்கள். பின்பு கிழவி மீனைக் கழுவுவதற்குத் தயாரானாள். அப்போது மஞ்சள் மீன் அவளுடன் பேசத் தொடங்கியது. கிழவி ஆச்சரியத்துடன் மீனைப் பார்த்தாள். மீன் அவளிடம், "என்னைத் துண்டமாக்காதே. என் செதிள்களை மட்டும் எடுத்துக் கறி சமைத்துக் கொள். என்னைத் திரும்பவும் கடலிலேயே விட்டு விடு. அதற்காக உங்களுக்கு வேண்டிய உதவியை நான் செய்வேன்." என்றது. கிழவியும் செதிள்களை எடுத்து விட்டு பைகோவையும், ரீகோவையும் அழைத்து மீனை அற்றில் விட்டு விடும்படி கூறினாள். அவர்களும் மீனைக் கொண்டு சென்று ஆற்றில் விட்டனர். மீன் அவர்களுக்கு நன்றியைக் கூறியது. அவர்கள் வீட்டுக்கு வந்தபோது அவர்களின் மீன் பாத்திரத்தில் நிறைய மீன்கள் இருந்தன.

அவற்றில் தங்களுக்குத் தேவையானதை எடுத்துக் கொண்டு மிகுதியை விற்றனர். ஒவ்வொரு நாளும் மீன் பாத்திரத்தில் ஒருமீன் போட்டதும் நிறைய மீன்கள் கிடைத்தன. அவர்கள் அவற்றை விற்றுப் பணக்காரர் ஆனார்கள். அவர்கள் பணக்காரர்களாகி விட்ட படியால் அவர்களைத் தேடி உறவினர்கள் எல்லோரும் வந்து சேர்ந்தார்கள். பணம்வந்த விட்டால் எல்லோரும் உறவைச் சொல்லி வருவது வாடிக்கை தானே!. ஏழையாக இருக்கும் போது யாரும் திரும்பிப் பார்ப்பதில்லை.

www.tamilarangam.net

கிழவியின் சகோதரி ஆற்றின் மற்றப் பக்கத்தில் இருந்தாள். அவள் பொறாமை பிடித்தவள். மந்திரம் தெரிந்த சூனியக்காரி. சகோதரிக்கு நல்ல வாழ்க்கை கிடைத்தது அவளுக்குக் மிகவும் பொறாமையாக இருந்தது. இவர்கள் திடீரென்று எப்படிப் பணக்காரராக முடியும்? என்று அவள் சிந்தித்தாள். அதை அறிவதற்காக விருந்தாளியாக அவர்கள் வீட்டில் தங்கினாள். விபரம் முழுவதையும் தன் சகோதரி மூலமாகத் தெரிந்து கொண்டாள்.

ஒருநாள் அவர்களுடைய மீன்பாத்திரத்தை எடுத்துக் கொண்டு ஓடினாள். அதை பைகோவும், ரீகோவும் கண்டனர். அவளைத் துரத்திச் சென்றனர். மந்திரம் தெரிந்த அவள் ரீகோவை நாயாகவும், பைகோவைப் பூனையாகவும் மாற்றினாள். பின் அவள் அவர்களைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தனர். தங்களைக் காணாது தாயும் தந்தையும் கவலையாக இருப்பது அவர்களுக்குத் தெரிந்தது. தெரிந்து என்ன ஆகி விடப் போகின்றது!. இருவருமே வீட்டிலேயே தங்கினர்.

மகன்களைக் காணாத கிழவனும் கிழவியும் கவலைப் பட்டனர். ஆனாலும் என்ன செய்வது?. பெற்றேரைப் பார்த்துக் கொண்டு மகன்கள் அருகில் இருப்பது, பாவம்! அவர்களுக்கு எப்படித் தெரியும்?. ஆனால் பைகோவும், ரீகோவும் தங்களினாலான உதவியை அவர்களுக்குச் செய்து வந்தனர். ரீகோ தந்தைக்கு உதவியாக ஆற்றுக்குச் சென்று மீன்

www.tamilarangam.net

பிடிக்க உதவி செய்வான். மீன் கூடையைச் சுமந்து வருவான். மீன் பாத்திரம் இல்லாதபடியால் கிடைக்கும் மீன்கள் உணவாக்கவே முடிந்தது.

பைகோ வீட்டில் தந்தை இல்லாத நேரத்தில் தாயாருக்குத் துணையாக இருப்பான். இரவில் தாயும் தந்தையும் மட்டுமல்ல, அண்ணன் ரீகோ தூங்கிப் போனாலும் விழித்திருந்து காத்துக் கொள்வான். ஒரு நாள் அவனுக்கு மிகுந்த பசி ஏற்பட்டது. வீட்டின் சுவர்த் துவாரத்துள் எலி ஒன்று ஓடுவதைக் கண்டான். அதனைப் பிடித்து உண்ணச் சென்றான். அப்போது அந்த எலி, அவனைப் பார்த்து "பைகோ! என்னைக் கொல்லாதே!. நானும் உன்னைப் போல மனிதனே. சூனியக்காரி என்னை மாற்றி விட்டாள். உன் மைத்துனன் ஈயென் நான். என் பெற்றோரைக் கொன்று விட்டு என் சொத்துக்களைப் பெறுவதற்கு மந்திரக்கார அத்தை முயன்றாள். நான் மறுக்கவே என்னை எலியாக்கி விட்டு என் சொத்துக்களை ஆண்டு கொண்டிருக்கிறாள். அவள் என்னைக் கொன்று விட்டாலும் என்ற பயத்தில் நான் உறவினரான உங்கள் வீட்டில் இருக்கிறேன்." என்றது.

மூவருமாக சூனியக்காரியைக் கொன்று விடத் திட்டம் தீட்டினார்கள். ஆற்றைக் கடக்க மஞ்சள் மீனை உதவி கோரினர். மீன் ஆற்றின் வேகம் குறைந்த இடத்தை அவர்களுக்குக் காட்டியது. ஆற்றில் நீந்தி அக்கரையை அடைந்தார்கள். இரவானதும் சூனியக்காரியின் வீட்டை அடைந்தார்கள். எலி சிறு துவாரத்தின் வழியாக

www.tamilarangam.net

வீட்டினுள் நுழைந்தது. பூனை யன்னல் வழியாக உள்ளே நுழைந்தது. நாய் வாசலில் நின்று கொண்டது.

சமயம் பார்த்து, எலியைப் பூனை துரத்தியது. எலி தூங்கிக் கொண்டிருந்த சூனியக்காரியின் மேல் ஓடியது. அவள் விழித்து எழுந்தபோது பூனை எரிந்து கொண்டிருந்த மெழுகுவர்த்தியை அணைத்து விட்டது. இருட்டில் தட்டுத்தடுமாறி வந்த சூனியக்காரி வாசல் கததவைத் திறந்த போது தட்டுத்தடுமாறி நாயின் மேல் விழுந்து விட்டாள். நாய் அவள் குரல் வளையைக் கடித்துக் குதறியது. சூனியக்காரி அந்த இடத்திலேயே இறந்து விட்டாள். நாயான ரீகோ மீன்பாத்திரத்தைத் தன் வாயால் கௌவிக் கொண்டதும், என்ன அதிசயம்! மூவருமே பழைய உருவமாக மாறி விட்டிருந்தனர்.

ஈயென் விடை பெற்றுத் தன் வீட்டுக்குச் சென்றான். ரீகோவும், பைகோவும் மீன் பாத்திரத்தோடு வீட்டுக்கு வந்தார்கள். மகன்களைக் கண்ட கிழவனும் கிழவியும் அன்போடு அணைத்துக் கொண்டனர். பின் அவர்கள் திரும்பவும் பணக்காரராகி வாழ்ந்தார்கள்.


எல்லோரும் சொல்கிறார்கள் என்பது பொய்யின் உடன்பிறந்த சகோதரர்கள்.
--அரிஸ்டோட்டில்-

www.tamilarangam.net

# Nektar für die Kinder

# Nectar for the children

# Nectar pour les eleves



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
0227: / 66527

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்